/

# கொழும்புப் பல்கலைக்கழகம்

## கல்விப் பீடம்

## கல்விமாணி (பகுதிIII) முதலாம் பருவப் பரீட்சை – 2017/2018

## BED 2101 கல்வியின் தத்துவ மற்றும் சமூகவியல் அடிப்படைகள்

**நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

- பகுதி "அ" இலுள்ள முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்கும், பகுதி "ஆ" இலுள்ள ஆறாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ஒவ்வொரு பகுதிக்குமுரிய விடைகளை வெவ்வேறு புத்தகங்களில் எழுதி ஒப்படைக்குக.
- ஒவ்வொரு விடைப் புத்தகத்தின் வலதுபக்க மேல் மூலையில் பகுதியையும் அதன் பெரையும் எழுதுக.
- முதலாம் மற்றும் ஆறாம் வினாக்களுக்கு 20 புள்ளிகள் வீதமும் ஏனைய வினாக்களுக்கு 15 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

---

## பகுதி "அ"

### கல்வியின் தத்துவவியல் அடிப்படைகள்

1.

i. கல்விக்கும் ஏனைய துறைகளுக்குமிடையிலான தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக.
(04 புள்ளிகள்)

ii. கல்விக்கும் தத்துவத்துக்குமிடையில் தொடர்புகள் காணப்படுகின்றன என்பதற்கான இரண்டு காரணங்களைத் தருக
(04 புள்ளிகள்)

iii. இலட்சிய வாதத்தின் முக்கியமான தத்துவார்த்த சித்தனைகள் (கோட்பாடுகள்) இரண்டினைத் தருக.
(04 புள்ளிகள்)

iv. கல்வித் தத்துவத்தைக் கற்பதால் ஆசிரியருக்கு ஏற்படும் நன்மைகள் நான்கினை எழுதுக.
(04 புள்ளிகள்)

v. மஹாத்மா காந்தி கல்வி பற்றி முன்வைத்த கருத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(04 ள்ளிகள்)

2.

i. கல்வியில் இயற்கைவாதச் சிந்தனைக்கும் பயன்கொள்வாதச் சிந்தனைக்கும் இடையிலான தத்துவக் கருத்துக்களின் வேறுபாடுகளைத் தருக.
(07 புள்ளிகள்)

ii. கல்வியில் இயற்கைவாதச் சிந்தனையின் நான்கு முக்கிய விடங்களைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

3.

i. கல்வி என்ற எண்ணக்கருவின் பண்புளை உதாரணங்களோடு சுருக்கமாக விளக்கு.
(07 புள்ளிகள்)

ii. முறைசாராக் கல்வியின் நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

4.

i. கல்விமாணிப் பட்டத்தைப் பெறக் கற்பவர்களுக்கு "கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகளை"க் கற்பதன் தேவையைச் சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. பயன்கொள்வாதத்தால் முன்வைக்கப்பட்ட கற்பித்தல் முறைகள் இன்றைய கல்விப்புலத்திற்கு எவ்வளவு பொருத்தப்பாடுடையன என்பது பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

5.

i. மஹாத்மா காந்தியின் தத்துவார்த்தக் கருத்துக்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. "மஹாத்மா காந்தியின் கல்விச் சிந்தனைகள்" 21 ஆம் நூற்றாண்டுக்கான கல்வியோடு எவ்வாறு தொடர்புபடுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டுக.

(08 புள்ளிகள்)

## பகுதி "ஆ"

## கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்

6.

i. ஓர் ஆசிரியர் கல்விச் சமூகவியலைக் கற்பதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் 4 ஐ முன்வைக்குக.

ii. கலாசாரப் பாதிப்பு கல்வியில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதனை எடுத்துக் காட்டுக.

iii. மறைக் கலைத்திட்டச் செயற்பாடுகளான ஆசிரியர்களின் மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகள் மாணவர்களைச் சமூகமயப்படுத்துவதில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதனை எடுத்துக்காட்டுக.

iv. சமூக மாற்றத்திற்கு தடையாக அமையக்கூடிய பாடசாலை மட்டக் காரணிகள் 4ஐ முன்வைக்குக.

v. கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்துவதில் இன ரீதியான சமூகமயமாக்கல் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனை எடுத்துக் காட்டுக.

(5x4 = 20 புள்ளிகள்)

7.

i. கலாசார நிலமைகள் மற்றும் கலாசாரப் பகுப்பாய்வு என்பன கல்வியுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதனை விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. அறிவு, திறன், மனப்பாங்கு என்பற்றினூடாக பாடசாலைக் கலாசாரம் மாணவர்களுக்கு பரிமாற்றப்படும் வழிமுறைகளை விபரிக்குக.

(8 புள்ளிகள்)

8.

i. சமூகவியலில் சமூகக்குழு என்ற எண்ணக்கருவை விளக்கி பாடசாலைச் செயன்முறையில் முறைசார் குழுக்கள் எவ்வாறு தாக்கஞ் செலுத்துகின்றது என்பதனை விபரிக்குக.

(7 புள்ளிகள்)

ii. பாடசாலைத் தொழிற்பாடுகளில் முறையிற் குழுக்களின் பங்கினை எடுத்துக்காட்டி பாடசாலைக்கு பயன்படக்கூடிய வகையில் இவ் முறையிற் குழுக்களை எவ்வாறு முகாமை செய்யலாம் என்பதனை விளக்குக.

(8புள்ளிகள்)

9.

i. கீழ்வரும் நிலைமைகள் மீது சமூக வகுப்பு தாக்கஞ் செலுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுக.

a. கல்வியில் மாணவர்களின் சேர்வு

b. கல்வியில் நிலைத்திருத்தல்

c. கல்வி அடைவு

d. கல்வி வெளியீடு

(8 புள்ளிகள்)

ii. இலங்கையின் சமகாலக் கல்வி முறைமையில் கீழ்நிலைச் சமூக வகுப்பிலிருந்து வரும் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற தடைகளை ஆராய்க.

(7 புள்ளிகள்)

10.

i. தொழில் வாண்மை என்பதனை விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. வாண்மை தொழில் என்ற வகையில் ஆசிரியத் தொழிலின் இயல்புகளை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(8 புள்ளிகள்)